**D 93096** (Pages : 2) Name.................................

Reg. No.................................

# THIRD SEMESTER (CBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 4(3) C03—THAMIZHIYAL II–AGARATHI IYAL

Time : Two Hours and a Half Maximum : 80 Marks

## Section A

*Answer at least* **ten** *questions.*
*Each question carries 3 marks.*
*All questions can be attened.*
*Overall Ceiling* 30.

1 நிகண்டு என்பதன் பொருள் யாது ?

2 காலத்தால் முற்பட்ட நிகண்டு பற்றி எழுதுக.

3 சொல்தெரிவு - பொருள் தருக.

4 உருவொப்புமை என்றால் என்ன ?

5 சொல்லடைவு என்பது யாது ?

6 திரிசொல் - விளக்கம் தருக.

7 பல பொருள் ஒருசொல் - சான்றுடன் விளக்கி கூறுக.

8 அகராதி நிகண்டின் வேறு பெயர்கள் யாவை ?

9 குறிப்பான்கள் என்றால் என்ன ?

10 ஆட்சிச் சொல் அகராதி பற்றி கூறுக.

11 அகராதியின் பயன்கள் யாவை ?

12 பொருண்மை நிரல் என்றால் என்ன ?

13 பெஸ்கியின் அச்சேறாத அகராதிகள் எவை ?

14 வினைத்திரிபு என்றால் என்ன ?

15 காலமுறை அகராதி - பொருள் தருக.

(10 × 3 = 30 marks)



CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

## Section B

*Answer at least* **five** *questions.*
*Each question carries* 6 *marks.*
*All questions can be attened.*
*Overall Ceiling* 30.

16 சதுர அகராதி குறித்து எழுதுக.

17 சொற்பிறப்பியல் அகராதி குறித்து விவரிக்க.

18 மேலைநாட்டுத் தொடர்பால் தமிழ் அகராதித் துறைக்கு கிடைத்த நன்மைகள் யாவை ?

19 சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பற்றி விளக்குக.

20 தமிழில் இருமொழி அகராதி உருவாக்கம் பற்றி விளக்கி எழுதுக.

21 கலைக்களஞ்சியங்கள் குறித்து எழுதுக.

22 அகராதிக்கும் இலக்கணத்திற்கும் இடையே அமைந்த தொடர்பை விளக்குக.

23 கல்வித்துறையில் அகராதியின் பங்கு பற்றி விளக்குக.

(5 × 6 = 30 marks)

## Section C

*Answer any* **two** *questions.*
*Each question carries* 10 *marks.*

24 நிகண்டுகள் குறித்து விரிவாக விளக்குக.

25 அகராதிகளின் வகைகளைக் குறிப்பிட்டுக் கட்டுரை எழுதுக.

26 அகராதியின் வளர்ச்சிக்கு நிகண்டுகளின் பங்கு குறித்து விவரிக்க.

27 அகராதியியலுக்கும் மொழியியலுக்கும் இடையேயான தொடர்பை விளக்கிக் கட்டுரை வரைக.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

**D 93095**

**(Pages : 2)**

**Name.................................**

**Reg. No.............................**

# THIRD SEMESTER (CBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 3B 04—ILAKKANAM NANOOL–EZHUTHU

Time : Two Hours and a Half

Maximum : 80 Marks

## Section A

*Answer at least* **ten** *questions.*
*Each question carries* 3 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

1 ஒத்து என்றால் என்ன ?

2 குற்றியலுகரம்–சிறுகுறிப்பு வரைக.

3 சார்பெழுத்தின் வகைகளாக நன்னூலார் கூறுவன யாவை ?

4 இனவெழுத்து என்றால் என்ன ?

5 வல்லின எழுத்துக்கள் எவை.

6 பகுபத உறுப்புக்கள் சிலவற்றைத் தருக.

7 வேற்றுமைப் புணர்ச்சி–குறிப்பு வரைக.

8 குற்றியலுகரம் குறித்து சிறுகுறிப்பெழுதுக.

9 மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

10 "சந்தியக்கரம்" என்றால் என்ன ?

11 விருத்தியுரை–குறிப்பு வரைக.

12 ஓரெழுத்தொருமொழி குறித்து எழுதுக.

13 உடனிலை மெய்ம்மயக்கத்திற்கான சிறப்பு விதியைக் கூறுக.

14 காலங்காட்டும் விகுதிகள் யாவை ?

15 உயிர் முன் உயிர் புணர்தல் குறித்து எழுதுக.

(10 × 3 = 30 marks)

**Turn over**

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

## Section B

*Answer at least* **five** *questions.*
*Each question carries* 6 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

16 சூத்திரவகைகளை விளக்கி வரைக.

17 பாடங்கேட்கும் முறைமை குறித்து விளக்குக ?

18 உத்திகள் குறித்து எழுதுக.

19 இடுகுறிப்பெயர் காரணப்பெயர் விளக்குக.

20 அல்வழி புணர்ச்சி, வேற்றுமை புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.

21 பல, சில என்பவற்றிற்கான சிறப்பு விதியைக் கூறுக.

22 வினாச் சுட்டின்முக் நாற்கணமும் புணரும் விதம் குறித்து எழுதுக.

23 தேன் எனும் சொல்லுக்கான சிறப்பு விதியைக் கூறுக.

(5 × 6 = 30 marks)

## Section C

*Answer any* **two** *questions.*
*Each question carries* 10 *marks.*

24 பிறப்பின் பொதுஇலக்கணம் கூறி முதலெழுத்து பிறக்கும் முறையை எடுத்துரைக்க.

25 எண்ணுப்பெயர்கள் புணரும் முறையை விளக்குக.

26 ஆசிரியரின் வரலாறாக நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

27 நன்னூலார் கூறும் மெய்யீற்று புணர்ச்சியை சான்றுகளுடன் விளக்குக.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

**D 93094** (Pages : 3) Name.................................

Reg. No...............................

# THIRD SEMESTER (CBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 3B 03—IDAIKKALA ILAKKIYAM

Time : Two Hours and a Half Maximum : 80 Marks

## Section A

*Answer at least* **ten** *questions.*
*Each question carries* 3 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

1 கடுவெளி சித்தர் எவற்றையெல்லாம் பின்பற்றக் கூடாது என்று குறிப்பிடுகிறார் ?

2 தசரதனின் துயர் கண்டு கலங்காத கைகேயியைக் கம்பர் எவ்வாறு உவமைப்படுத்துகிறார் ?

3 கண்ணன் படுத்திருக்கும் அழகைத் தேவகி எதனோடு ஒப்பிடுகிறாள் ?

4 பெருமாள் திருமொழி—சிறு குறிப்பு வரைக.

5 கோலியாத்தின் தோற்றத்தினை எழுதுக.

6 மனிதனைப் படைத்த பிரம்மன் யாது செய்ததாக இராமச்சந்திரக் கவிராயர் கூறுகிறார் ?

7 மக்கா நகரத்து கோட்டையின் சிறப்பு யாது ?

8 நெற்கதிரின் விளைச்சலைத் திருத்தக்க தேவர் எவ்வாறு நயம்பட உரைத்துள்ளார் ?

9 பைங்கிளிக் கண்ணியிலமைந்த உவமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

10 விசையைக் கண்ட கனவினைக் கூறுக.

11 சுந்தரர் தேவாரம்—குறிப்பு வரைக.

12 ———— அடிசிலின் மிச்சில்

உண்ணப் பெற்றிலேன்—இப்பாடல் வரியின் பொருளை விளக்குக.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

13 பிள்ளைத் தமிழின் இலக்கணத்தைக் கூறுக.

14 இராமலிங்க அடிகளாரின் ஒருமைப்பாட்டுச் சிந்தனையை எழுதுக.

15 தாயுமானவரின்—சிறு குறிப்பு வரைக.

(10 × 3 = 30 marks)

## Section B

*Answer at least* **five** *questions.*
*Each question carries* 6 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

16 சுந்தரர் தன்னை ஆட்கொண்ட இறைவனைப் பணிந்து வாழ்த்துவதை எடுத்துரைக்க.

17 கைகேயியின் வரத்தால் துயரடைந்த தசரதனின் ஐம்புலன்களின் நிலையினை விளக்குக.

18 'நல்ல தாயாரைப் பெற்றாய்' என்று தேவகிப் புலம்புவதற்கானக் காரணத்தை எடுத்துரைக்க.

19 மக்கா நகரத்து கடை வீதியின் சிறப்பினைக் கூறுக.

20 பாம்பிற்கும் எலுமிச்சைப் பழத்திற்குமுள்ள சிலேடை நயத்தினை உணர்த்துக.

21 பற்றினைக் கைவிட்டு இறைவனைச் சேரத் தாயுமானவர் செய்யும் முயற்சிகளைப் புலப்படுத்துக.

22 தமிழோடு பிறந்து மதுரையில் வளர்ந்த மீனாட்சியம்மையை ஊசலாடும்படி குமரகுருபரர் வாழ்த்துவதைக் கருத்துரைக்க.

23 உழவுத் தொழிலின் சிறப்பினைச் சீவகசிந்தாமணி மூலம் வெளிப்படுத்துக.

(5 × 6 = 30 marks)

## Section C

*Answer any* **two** *question.*
*Each question carries* 10 *marks.*

24 அச்சணந்தி, சீவகனின் பிறப்பு வரலாற்றை எடுத்துக்கூறி அறிவுறுத்திய தன்மையினை வெளிப்படுத்துக.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

25 கடுவெளி சித்தர் இளைஞர்களுக்கு கூறும் சமுதாயச்சீர்திருத்த அறிவுரைகளை விளக்கி வரைக.

26 தாலப்பருத்தில் இடம்பெற்ற செய்திகளை மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் வாயிலாக புலப்படுத்துக.

27 தாவீது கோலியாத்தின் மீது கோபம் கொண்டதற்கான காரணத்தையும் கோலியாத்தின் வீழ்ச்சியையும் விரித்தெழுதுக.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

**D 92907** (Pages : 3) Name..................................

Reg. No...............................

# THIRD SEMESTER (CBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 3A 09—MOZHI ALUM ALUMAITHIRAN

Time : Three Hours Maximum : 80 Marks

## Section A

*Answer at least* **ten** *questions.*
*Each question carries* 3 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

1 மணிப்பிரவாளம்—சிறு குறிப்பெழுதுக.

2 மலையாள இலக்கிய வரலாற்றில் இராமசரிதம் பெறுமிடம் யாது ?

3 "வழுவிப்பின்னால் ஏகியொரு வார்த்தை மாற்றம் செய்திடுமோ"—இடஞ்சுட்டுக.

4 இளங்கோவடிகள்—ஆசிரியர் குறிப்பெழுதுக.

5 கம்பராமாயணம்—சிறுகுறிப்பெழுதுக.

6 கேரளத்து வள்ளலார் யார் ? அவ்வாறு அழைக்கப்படக் காரணம் என்ன ?

7 "தோட்டங்களை அழகுபடுத்துவதற்காகப்

பறித்து வீசிய அழகுமுத்து நான்"—இடஞ்சுட்டுக.

8 கண்ணச கிருதிகள் யாவை ?

9 மலையாள அரசவை இலக்கியங்கள் யாவை ?

10 தேம்பாவணி—பெயர்க்காரணம் எழுதுக.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

11 சாதி மத பேதங்களுக்கெதிரான நாராயணகுருவின் முழக்கம் யாது ?

12 ஓ. என். வி. குறுப்பின் ஏதேனும் இரண்டு படைப்புகளைச் சுட்டுக.

13 தெலுங்கு மொழியின் வரிவடிவம் காணப்படும் இரண்டு வரலாற்றுச் சான்றுகளைக் குறிப்பிடுக.

14 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'—இணையான ஆங்கிலப் பழமொழியை எழுதுக.

15 எடுத்துக்காட்டு உவமையணி என்றால் என்ன ?

(10 × 3 = 30 marks)

## Section B

*Answer at least* **five** *questions.*
*Each question carries* 6 *marks.*
*All questions can be attended.*
*Overall Ceiling* 30.

16 பெரியபுராணத்தின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

17 மழையின் தன்மைகளைக் கலீல் ஜிப்ரான் எவ்வாறு புனைந்துரைக்கின்றார் ?

18 தமிழ் மலையாள இலக்கியங்களுக்கிடையேயான அடிப்படை ஒப்பாய்வுக் களங்களை விவரிக்க.

19 புதுச்செவ்வியல் நெறியின் தன்மைகளை விளக்கி எழுதுக.

20 தமிழ்–தெலுங்கு இலக்கியப் போக்கு குறித்து எழுதுக.

21 இராமசரிதத்தைத் தமிழ்க் காப்பியம் என்று கூறுவதற்கான அகச்சான்றுகளை தொகுத்தெழுதுக.

22 பேரில்லாத மனிதர்க்குத் திருப்பிக் கொடுக்க

நாமொரு பாட்டுப்பாட வேண்டும்"—இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

23 வள்ளலாரின் இறைக் கோட்பாட்டினை விளக்கி எழுக.

(5 × 6 = 30 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

## Section C

*Answer any* **two** *question.*
*Each question carries* 10 *marks.*

24 தமிழில் காப்பிய இலக்கிய வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

25 மலையாள ஆட்டக்கதைகளிலும் தமிழ்ப்பிரபந்தங்களிலும் காணலாகும் புதுச்செவ்வியல் நெறிகளை ஆராய்ந்து கட்டுரைக்க.

26 பின்வரும் பகுதியை **ஆங்கிலத்தில்** மொழிபெயர்க்க :

காந்திஜியின் போராட்ட முறை உலக நாடுகளுக்கு ஒரு புது முறையாகவே இருந்தது. அக்கிரமங்களுக்கு வழிவகுக்காமல் அடிதடிகளுக்கு இடம் கொடுக்காமல் உயிர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்விதச் சேதமும் விளைவிக்காமல் அஹிம்சை வழியில் நின்றுகொண்டு போராட்டங்களை வெற்றிகரமாக வழி நடத்திய பெருமை அவருக்கு மட்டும்தான் உண்டு. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்றை நடத்திய பெருமை அவருக்கு மட்டும்தான். அமைதியான சத்தியாகிரகங்களையும் உண்ணாவிரதங்களையும் மட்டுமே அவர் தமது போராட்டங்களின் ஆயுதங்களாக பயன்படுத்தினார். அக்கிரமங்களின் வாயிலாகப் பெறும் ஆக்கங்களைவிட அமைதி வழியில் பெறும் ஆக்கங்களே எந்நாளும் நிலைத்து நிற்கும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார் காந்திமகான்.

27 பின்வரும் பகுதியைத் **தமிழில்** மொழிபெயர்க்க :

Youth movement in India is essentially confined to educated, urban young men and women in the country. In modern Indian history it can be traced to the post 1919 period when the fight for Independence started gathering momentum under the leadership of Mahatma Gandhi. It was the part of the culture of national movement to include youth, particularly then students, among those who were called upon to wage a battle against the British, though in the form of peaceful civil disobedience. Students involvement in political activity thus become a respectable phenomenon having blessed by the father of nation himself.

(2 × 10 = 20 marks))

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

D 91846 (Pages : 3) Name..............................

Reg. No..............................

# THIRD SEMESTER (CUCBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 3B 04—NANOOL (EZHUTHU)

(2017 Admissions)

Time : Three Hours Maximum : 80 Marks

I. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக :

1 செய்யுள் விகாரங்கள் எவை ?

2 தோன்றல் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

3 மூவகை நூல்கள் எவை ?

4 ‘மொழிமுதல் காரணமாம் அணுத்திரள்’ எது ?

5 தலையிலிருந்து பிறக்கும் எழுத்து யாது ?

6 இடுகுறிப்பெயர் என்றால் என்ன ?

7 உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன ? சான்று தருக.

8 பல் + தாழிசை எவ்வாறு புணரும்.

9 நிகழ்கால இடை நிலைகளைக் குறிப்பிடுக.

10 வடமொழிச்சந்தி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

(10 × 1 = 10 marks)

II. பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் பத்தனுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடை தருக :

11 புணர்ச்சி வகைகளை விளக்கியுரைக்க.

12 எழுத்துக்கள் மாத்திரை பெறும் விதத்தை விளக்குக.

Turn over

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

13 வினாயெழுத்துக்கள் என்றால் என்ன ? அவை யாவை ?

14 திசைப்பெயர்கள் புணரும் விதத்தை விளக்குக.

15 உயிரீற்று மரப்பெயர் முன் வல்லினம் புணரும் விதத்தை எடுத்துரைக்க.

16 ப, ம எவ்வாறு பிறக்கும் ?

17 உயிரளபெடை என்றால் என்ன ?

18 இணை உயிர்கள் என்றால் என்ன ? சான்று தருக.

19 மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை ?

20 பகுதி என்றால் என்ன ?

21 போலியின் வகைகளை விளக்கியுரைக்க.

22 உடம்படு மெய்கள் எவை ?

(10 × 2 = 20 marks)

III. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்குச் சிறு கட்டுரை வடிவில் விடை தருக :

23 சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் கூறி அதன் தனித்தன்மைகளையும் விவரிக்க.

24 உகர ஈற்றுப்பெயர்கள் புணரும் முறையைக் குறிப்பிடுக.

25 பதத்தின் இலக்கணம் கூறிப் பகுபதம் பகாப்பதத்தை விளக்குக.

26 மெய்ம்மயக்கம் என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

27 வேற்றுமைப்புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சிகளைத் தெளிவுபடுத்துக.

28 இடை நிலையின் வகைகளை விவரி.

29 பிறப்பின் பொது இலக்கணம் கூறி எழுத்துக்களின் பிறப்பை எடுத்துரைக்க.

30 தொழிற்பெயர்கள் புணரும் விதத்தைச் சான்றுடன் விளக்குக.

(5 × 6 = 30 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

IV. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக :

31 சார்பெழுத்துக்களின் இலக்கணம் கூறி அதன் வகைகளைச் சான்றுடன் விவரி.

32 தற்காலத் தமிழ்மொழிக்கு நன்னூலார் கூறும் புணர்ச்சி விதிகள் பொருந்துகின்றனவா ? விளக்குக.

33 எண்ணுப்பெயர்களின் புணர்ச்சி விதியை விளக்கியுரைக்க.

34 நன்னூலார் கூறும் மெய்யீற்றுப் புணர்ச்சிவிதிகளின் சிறப்புக்களை விவரிக்க.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

**D 91845** (Pages : 2) Name.................................

Reg. No.................................

# THIRD SEMESTER (CUCBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

Tamil

TML 3B 03—MEDIEVAL LITERATURE

(2017 Admissions)

Time : Three Hours Maximum : 80 Marks

I. பின்வரும் வினாக்களுக்கு **ஓரிரு** சொற்களில் விடை தருக :

1 ‘ஒருமைப்பாடு’ இடம்பெற்ற நூல் எது ?

2 கிறிஸ்தவக் காப்பியங்கள் இரண்டனைக் கூறுக.

3 முதல் விருத்தக்காப்பியம் எது ?

4 ‘வைக்கோலுக்கும் யானைக்கும்’ என்னும் பாடலைப் பாடியவர் யார் ?

5 தேவாரம் பாடியவர்கள் யாவர் ?

6 முதல் பிள்ளைத்தமிழ் எது ? யாரால் பாடப்பட்டது ?

7 ‘புல்லிடை உகுத்த அமுதல் போல’ என்று மந்தரை கூறக் காரணம் யாது ?

8 ‘விண்ணவர்தம் பாலமுதம்’—பொருள் விளக்கம் தருக. இந்திரிய சுகம்.

9 கடுவெளிச்சித்தர் பாடல்களில் மக்களால் விரும்பிப் பாடப்படும் இசைப்பாடல் எது ?

10 திருவேங்கட மலையில் குருகாய்ப் பிறக்க எண்ணியவர் யார் ?

(10 × 1 = 10 marks)

II. பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் பத்திற்கு **ஓரிரு** வாக்கியங்களில் விடை தருக :

11 கைகேயியின் மனம் மாறக் காரணம் யாது ?

12 கோலியாத்தின் தோற்றம் குறித்து எழுதுக.

13 ‘ஊருமிலார் பேருமிலார் உற்றார் பேற்றோருடன்

யாருமிலார் என்னை அறிவாரோ’—இடம் சுட்டிப் பொருள்

விளக்கம் தருக.

14 ‘கடுவெளி’—சிறுகுறிப்பு எழுதுக.

Turn over

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

15 'கல்லைத்தான் மண்ணைத்தான்' என்னும் பாடலைப் பாடியவர் யார் ?

16 பெலித்தேயர் யாரை எதிர்த்தனர் ?

17 இருபால் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவான பருவங்கள் எவை ?

18 கைகேயியின் மனத்திரிபால் உலகத்தோர்க்கு நன்மையுண்டாகக் காரணம் யாது ?

19 கோலியாத்தின் தோற்றம் குறித்து எழுதுக.

20 சுந்தரர் தேவாரம்—குறிப்பெழுதுக.

21 பக்திமிகுதியால் குலசேகரர் பிறக்க விரும்பும் பிறவிகள் எவை ?

22 'பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ எம்மிறைவர்
மெய்க்கூடு சென்று விளம்பிவா, 'இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

(10 × 2 = 20 marks)

III. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்குச் **சிறு கட்டுரை** வடிவில் விடை தருக :

23 மந்தரையின் சூழ்ச்சித்திறத்தை விளக்குக.

24 சீவகசிந்தாமணியில் பயின்றுவரும் உவமைகளை எடுத்துரைக்க.

25 சித்தர்பாடல்களில் பயின்றுவரும் நிலையாமைக் கருத்தை விளக்குக.

26 விமலை பந்தாடும் விதத்தைச் சுட்டுக.

27 தனிப்பாடல்களின் தனித்தன்மைகளை விவரி.

28 இராமன் நாட்டை ஆண்டால் வரும் தீமைகளாக மந்தரை கூறுவன யாவை ?

29 இறைவனின் அவதாரங்களாகக் குலசேகராழ்வார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

30 தாவீது இஸ்ரவேலரிடம் கூறிய வீரமொழிகள் யாவை ?

(5 × 6 = 30 marks)

IV. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக :

31 காப்பிய இலக்கணக்கூறுகள் விமலையாரிலம்பகத்தில் பொருந்துகின்றனவா ? விவரி.

32 சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

33 பக்தி இலக்கியங்களில் காணலாகும் உவமை நயத்தினை விளக்குக.

34 வளன்சனித்த படலம் தரும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

**D 91669 –A** **(Pages : 4)** **Name.......................................**

**Reg. No.....................................**

**THIRD SEMESTER (CUCBCSS—UG) DEGREE EXAMINATION**
**NOVEMBER 2020**

(CUCBCSS—UG)

Tamil

TML 3A 09—TRANSLATION AND COMMUNICATION

(2017 Admissions)

(Multiple Choice Questions for SDE Candidates)

| **Time : 15 Minutes** | **Total No. of Questions : 20** | **Maximum : 20 Marks** |
|---|---|---|

# INSTRUCTIONS TO THE CANDIDATE

1. This Question Paper carries Multiple Choice Questions from 1 to 20.
2. The candidate should check that the question paper supplied to him/her contains all the 20 questions in serial order.
3. Each question is provided with choices (A), (B) and (C) having one correct answer. Choose the correct answer and enter it in the main answer-book.
4. The MCQ question paper will be supplied after the completion of the descriptive examination.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

# TML 3A 09—TRANSLATION AND COMMUNICATION

(Multiple Choice Questions for SDE Candidates)

1. "மொழிபெயர்ப்பு என்பது மொழிகளுக்குள்ளே போடும் பாலத்திற்கு ஒப்பாகும்" என்பது யாருடைய கூற்று ?

   (A) மு. கோவிந்தராஜன். (B) ஸ்ரீராம் தேசிகன்.

   (C) மு. கணபதிப்பிள்ளை.

2. வ.உ.சி. அவர்கள் தமிழில் மொழிபெயர்த்த நூல் எது ?

   (A) மனம் போல் வாழ்வு. (B) அழகின் சிரிப்பு.

   (C) மகாபாரத சூடாமணி.

3. "Adaptation" என்பதன் தமிழாக்கம் ?

   (A) சுருக்கம். (B) தழுவல்.

   (C) சரியான மொழிபெயர்ப்பு.

4. "உமர்கய்யாமின் பாடலை மொழிபெயர்த்தவர் யார் ?

   (A) விபுலானந்த அடிகள்.

   (B) மறைமலையடிகள்.

   (C) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

5. அ.கி. ஜெயராமன் மொழிபெயர்த்த நாவல் எது ?

   (A) சைலஜா. (B) மிதுன லக்னம்.

   (C) சூரியன்.

6. டா மார்டின் லூதர் கிங் அவர்களின் வரலாற்றினை 'அறநெறி பாடிய வீரகாவியம்' ? என தமிழ்ப்படுத்தியவர் ?

   (A) திரு. எஸ். வெங்கடாசலம். (B) ஸ்ரீ இராமதேசிகர்.

   (C) திலகவதி பால்.

7. 'தர்மதீபிகை'—யை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார் ?

   (A) திரு. நியூமன். (B) திரு. எஸ். வெங்கடாசலம்.

   (C) திரு. வை. சாம்பசிவம்.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

8. ‘மலை நாட்டு மங்கை’ என்னும் அஸ்ஸாமிய நாவல் யாரால் தமிழாக்கம் செய்யப்பட்டது ?

 (A) திரு. கா. அப்பாதுரை.
 (B) அ. கி. ஜெயராமன்.
 (C) திரு. ஆர். சண்முகசுந்தரம்.

9. திரு. துரை. அரங்கசாமி என்பவர் மொழிபெயர்த்த நாடகம் எது ?

 (A) காட்டு வாத்து
 (B) பிறிதொரு இந்திரஜித்.
 (C) வெனிஸ் வர்த்தகன்.

10. குஜராத்தி மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நாவல் எது ?

 (A) மலைநாட்டு மங்கை.
 (B) ஜெயசோமநாத்.
 (C) சைலஜா.

11. “நல்ல மொழிபெயர்ப்புகள் நம் காலத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாகும்” ? என்பது யார் கூற்று ?

 (A) F.L. Lucus.
 (B) Aristattle.
 (C) Plate.

12. “மொழிபெயர்ப்பில் தொலைத்து விடுவது கவிதை” யார் கூற்று ?

 (A) கேலன்.
 (B) ராபர்ட் பீராஸ்ட் கூற்று.
 (C) ஹிப்போகிரட்டஸ்.

13. ‘இது என்ன பெரிய விஷயம்’—யாருடைய படைப்பு ?

 (A) ஜெயமோகன்.
 (B) சுந்தர ராமசாமி.
 (C) ஜெயகாந்தன்.

14. “Pun” என்பதன் தமிழாக்கம் யாது ?

 (A) சிலேடை.
 (B) அடுக்குத்தொடர்.
 (C) உவமை.

15. “Photosynthesis” என்பதன் தமிழாக்கம் சுட்டுக.

 (A) ஒளிவரையம்.
 (B) ஒளிவரை.
 (C) ஒளிச்சேர்க்கை.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

16. மார்டின் லூதர் அவர்களால் உயர்த்த செர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது ?

(A) விவிலியம்.
(B) கம்பராமாயணம்.
(C) மகாபாரதம்.

17. ஜான் டிரைடனுடைய வெர்ஜில் எந்த ஆண்டில் எழுதப்பட்டது ?

(A) 1673.
(B) 1677.
(C) 1675.

18. உமர்கய்யாமின் ரூபாயத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார் ?

(A) லாங்பெலோ.
(B) எட்வர்ட் பிட்ஸ் ஜரால்ட்.
(C) ஷெல்லி.

19. 'மைக்கேல் வென்றிஸ்' என்பவர் கண்டுபிடித்த ஒரு மொழி வடிவம் எது ?

(A) Linear B.
(B) Linear C.
(C) Linear D.

20. 1870-ல் "Merchant of Venice" என்ற நாடகத்தை வெனிஸ் வர்த்தகம் என்ற தலைப்பில் மொழிபெயர்த்தவர் யார் ?

(A) திரு. சண்முகம் பிள்ளை.
(B) திரு. விஸ்வநாத பிள்ளை.
(C) திரு. முத்துசாமி பிள்ளை.

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

D 91669 (Pages : 3) Name..............................

Reg. No..............................

# THIRD SEMESTER (CUCBCSS—UG) DEGREE EXAMINATION NOVEMBER 2020

(CUCBCSS—UG)

Tamil

TML 3A 09—TRANSLATION AND COMMUNICATION

(2017 Admissions)

Time : Three Hours Maximum : 80 Marks

I. அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக :

1 ஹைக்கூக் கவிதையை முதலில் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் யார் ?

2 அறிவியல் கலைச்சொல்லாக்கம் தமிழில் கி.பி. 1830 ஆம் ஆண்டு எவ்விதழில் தொடங்கப்பட்டது ?

3 தமிழுக்குரிய பண்பும் மணமும் கொண்டது எது என ரா. கிருஷ்ணையா கூறுகிறார் ?

4 ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளை விடமேலானது என்று கூறியது யார் ?

5 உலகின் சட்டப்புறம்பான கவிதையில் நிலைநிற்பது எது என செரபண்ட ராஜு குறிப்பிடுகிறார் ?

6 கல்யாண மாலையோடு வாக்குச் சாவடிக்குச் சென்றது யார் என குரீப்புழா குறிப்பிடுகின்றார் ?

7 சாலையோரத்தில் அலுத்துக் களைத்து அமர்ந்தது யார் என கம்பாரா கூறுகிறார் ?

8 மொழிபெயர்ப்பு அன்றும் இன்றும் என்னும் கட்டுரையின் ஆசிரியர் பெயர் யாது ?

9 மக்களின் ரொட்டி எது என பெர்டோல்டு பிரச்ட் கூறுகிறார் ?

10 உம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாலஸ்தீன் மொழிக் கவிதையின் பெயர் என்ன ?

(10 × 1 = 10 marks)

II. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு **ஒரு பத்தி** அளவில் விடை தருக :

11 மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் திறன்கள் யாவை ?

12 கலைச் சொல்லாக்கத்தின் பின்னடைவுக்கான காரணத்தைத் தருக.

Turn over

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

13 நா. தர்மராஜன் எதைப் பார்த்து ஏங்கித் தான் மொழிபெயர்க்க ஆரம்பித்ததாகக் கூறுகிறார் ?

14 தழுவல் மொழி பெயர்ப்பு என்றால் என்ன ?

15 விஸ்லவா சிம்போஸ்கா கட்டிட இடிமானக் கூளங்களை எதற்காகச் சாலையோரத்தில் வீசினர் எனத் தெரிவிக்கின்றார் ?

16 நீதி என்னும் ரொட்டியை யார், எவ்வாறு சுட்டுத்தர வேண்டும் என பெர்டோல்டு பிரச்ட் வலியுறுத்துகிறார் ?

17 வரவு செலவுக் கணக்கு எது என 'கம்பாரா' கூறுகிறார் ?

18 மகஹ்மூத் தர்விஸ் எதனைக் காட்சிப் பொருளாக்கியதாகக் கூறுகிறார் ?

19 வெளுத்த வானத்தின் வழியே கறுத்த சந்திரன் மெல்ல நீங்கி மறைவது எதனுடன் ஒப்பிடப்படுகிறது ?

20 வான்கா தனக்கு நேர்ந்த கொடுமை பற்றிக் கூறியது யாது ?

21 இயந்திர மொழிபெயர்ப்பு வேண்டாம் என ரா. கிருஷ்ணையா கூறக் காரணம் என்ன ?

22 செரபண்ட ராஜு எவையெல்லாம் சாகின்றன எனக் கூறுகிறார் ?

(10 × 2 = 20 marks)

III. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு **ஒருபக்க** அளவில் விடை எழுதுக :

23 கலைச்சொல்லாக்கத்தின் தேவைகளை விளக்கி வரைக.

24 நமது கடடை எதுவென ரா. கிருஷ்ணையா கூறுவதை எடுத்துரைக்க.

25 கடவுச் சீட்டில் எவற்றைச் சேர்க்கவில்லை என டார்விஸ் கூறுகிறார் ?

26 மொழிபெயர்ப்பு சிக்கல்களை விளக்கி எழுதுக.

27 ஒரு பெண் அடிமையாக நடத்தப்படுவதை "ஒரு முறை பெண்ணாகு பிரபுவே" என்னும் கதையின் வாயிலாக எடுத்துரைக்க.

28 தமிழ் மொழிபெயர்ப்புத் தளத்தில் சிற்றிதழின் பங்கை தொகுத்து எழுதுக.

29 'நான் சாட்சிக் கூண்டில் ஏறுகிறேன்' என்னும் கவிதையின் பொருளை விளக்கி எழுதுக.

30 தமிழில் கலைச்சொல்லாக்கம் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(5 × 6 = 30 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT

IV. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்குக் **கட்டுரை வடிவில்** விடை தருக :

31 மொழியாக்கம் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

32 வானப்பிரஸ்தம் நாவலின் வழியாக அறியலாகும் செய்திகளை விளக்கி வரைக.

33 பின்வரும் பகுதியைத் தமிழில் மொழி பெயர்க்கவும் :

What is Motivation ? It is the inner power that pushes you toward taking action and toward achievement. Motivation is powered by desire and ambition, and therefore, if they are absent, motivation is absent too. Sometimes, you might have the desire to get something done, or to achieve a certain goal, but if the desire and ambition are not strong enough, you lack the push, the initiative, and the willingness to take the necessary action, in these cases, you lack of motivation and inner drive. When there is motivation, there is initiative and direction, courage, energy, and the persistence to follow your goals.A motivated person takes action and does whatever it needs to achieve his or her goals Motivation becomes strong, when you have a vision, a clear mental image of what you want to achieve, and also a strong desire to manifest it.

34 பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

நூலகம் அறிவை வளர்க்கும் ஓர் இடமாகும். வாழ்வியல், வரலாறு, இலக்கியம், நிலநூல், மேற்கோள் நூல்கள், சிறுகதைகள், வார, மாத சஞ்சிகைகள், நாளிதழ்கள் அனைத்தும் நூலகங்களில் கிடைக்கும். நம் நாட்டில் தேசிய நூலகம், மாநில நூலகம், என பொது நூலகங்களும், மற்றும் நடமாடும் நூலகங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் படித்துப் பயனடையும் வகையில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன நூலகத்தில் அறிவை வளர்க்கக்கூடிய பலதரப்பட்ட விஷயங்களை நாம் அறிந்து கொள்ளலாம்., நமது மொழி வளத்தைப் பெருக்குவதற்கும் வாசிப்பைச் சரளமாக்குவதற்கும் நூலகம் முக்கியப்பங்காற்றுகிறது.

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மாணவர்களாகிய நாமும் நூலகம் தரும் பயன் அறிந்து நூல்கள் பல கற்று அறிவை வளர்த்து கொள்வோம்.

(2 × 10 = 20 marks)

CHMK LIBRARY UNIVERSITY OF CALICUT